# இலங்கையின் அதிக நன்மதிப்பை பெற்ற கம்பனிகளில் இரண்டாவது தடவையாகவும் காகில்ஸ் இடம்பிடித்தது

CIMA, ICCSL மற்றும் Daily FT என்பவற்றால் இலங்கையின் அதிக நன்மதிப்பைப் பெற்ற 10 கம்பனிகளில் ஒன்றாக தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகவும் காகில்ஸ் தெரிவு செய்யப்பட்டிருப்பதில் பெருமிதம் கொள்கின்றோம். நாம் தொடர்ந்தும் மக்களது தேவைகளுக்கு முதலிடம தந்து முன்னோக்கிச் செல்லும் இவ்வேளையில், இந்த அங்கீகாரமானது பெருந்தொற்றுக் காலத்தில் காகில்ஸ் நிறுவனத்தின் வணிக வடிவம் வெளிப்படுத்திய மீளெழும் ஆற்றலுக்குக் கிடைத்த ஒரு சான்றாகும். சமூகங்களின் அபிவிருத்தியில் அவதானம் செலுத்துவதனை அடிப்படையாகக் கொண்டே எப்பொழுதும் எமது கொள்கை அமைந்திருப்பதோடு, அதனூடாக எமது வியாபார நடவடிக்கைகள் இயல்பாகவே சிறப்பாக அமைந்து விடுகின்றன.

### மக்களுக்கு முதலிடம்

அத்தியாவசிய சேவை வழங்குனர் மற்றும் முன்னணி உணவுப்பொருட்கள் நிறுவனம் என்ற வகையில், நாம் பெருந்தொற்றுக் காலத்தில் தொடர்ந்தும் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்து வந்துள்ளோம். எமது அணுகல் மற்றும் செயற்பாடுகள் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. நாடெங்குமுள்ள எமது விவசாயிகளுக்கு தமது உற்பத்திகளுக்கான ஒரு சந்தை காணப்படாத ஒரு வேளையில் நாம் அவர்களுக்கு உத்தரவாதமான சந்தை ஒன்றைப் பெற்றுத்தந்து ஆயிரக்கணக்கான பயிர்ச்செய்கையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினோம். அத்துடன் எமது புத்தம்புது பால் சேகரிப்பு அளவை நாளுக்கு 180,000 லீட்டர்களாக அதிகரித்து, ஒரு அவுன்ஸ் பால் கூட வீணாகி விடக்கூடாது என்பதை உறுதி செய்தோம். 2020/21 ஆம் நிதியாண்டில் மாத்திரம் இலங்கையின் பாற் பொருட்கள் மற்றும் விவசாயப் பண்ணை சமூகத்தினருக்கு நேரடி வருமானமாக ரூ. 9 பில்லியனை காகில்ஸ் உருவாக்கித் தந்துள்ளது.

கடந்த வருடத்தின் முதலாவது கொவிட் 19 முடக்கல் காலப்பகுதியைத் தொடர்ந்து சிறிய தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுத்த சவால்களை உணர்ந்த நாம், கிராமத்திலிருந்து வீட்டுக்கு என்ற முன்னெடுப்பை 2020 செப்டெம்பரில் ஆரம்பித்திருந்தோம். இதன் நோக்கம் உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்களுக்கு பாரிய சந்தையுடன் இணைப்பை ஏற்படுத்தும் ஒரு தளத்தை உருவாக்கித் தருவதாகும். அவர்களுக்கு பொதியமைப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் தரத்தை உறுதி செய்தல் என்பவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மேலதிகமாக குறைந்த செலவிலான நிதியுதவியை காகில்ஸ் வங்கி பெற்றுத்தந்து அவர்கள் வியாபாரத்தைப் பெருக்க உதவுகிறது.

### பொருளாதாரத்துக்கு ஒத்துழைப்பு

எமது பெரும்பாலான மூலப் பதார்த்தங்களை உள்நாட்டிலேயே பெற்றுக்கொண்டு, சர்வதேச வர்த்தக நாமங்களுக்கு நிகரான பெறுமதி சேர்க்கப்பட்ட வாடிக்கையாளர் உற்பத்திகளை உருவாக்குவதன் மூலம் அந்நிய செலாவணியை நாட்டுக்கு சேமித்து தருவதில் காகில்ஸ் முக்கிய பங்காற்றுகிறது. தரம் மற்றும் புத்தாக்கங்களில் நாம் செலுத்தும் அவதானம் காரணமாக எமது உணவுப்பொருள் வர்த்தகநாமங்கள் முன்னணி தேசிய நாமங்களாக உருவெடுத்துள்ளன.

கடந்த 18 மாதங்களாக நிலவும் சவாலான தொழிற்பாட்டு சூழலுக்கு மத்தியிலும், காகில்ஸ் தொடர்ச்சியான முதலீடுகளை தனது அனைத்து வணிகங்கள் தொடர்பாகவும் மற்றும் நாடளாவிய ரீதியிலும் மேற்கொண்டு வருகிறது. 2020ஃ21 நிதியாண்டுக் காலத்தில் காகில்ஸ் குழுமமானது மொத்தமாக ரூ.6.4 பில்லியனை மூலதனமாக முதலீடு செய்துள்ளது. இது இலங்கை மீதும், தற்போதைய சவால்களை எதிர்கொண்டு முன்பைப் போலவே நாம் மீண்டும் எழுச்சி பெறுவோம் என்ற ஆற்றல் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இலங்கையின் முன்னணி கூட்டு நிறுவனம் என்ற வகையில், சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்து அனைத்து பங்குதாரர்களுக்கும் பெறுமதி சேர்ப்பதற்காக தொடர்ந்தும் முதலீடுகளை அதிகரிப்பதற்கு காகில்ஸ் எதிர்பார்த்துள்ளது.

### எமது அணியே எமது பலம்

மிகச் சவாலான காலப்பகுதியிலும் மக்களின் தேவைகளுக்கு தொடர்ச்சியாக சேவை வழங்கும் காகில்ஸ் அணியின் காரணமாகவே இவ் அங்கீகாரம் கிட்டியுள்ளது. பெருந்தொற்றுக் காலப்பகுதியில் எமது தலையாய கடமையானது எமது அணியினைப் பாதுகாப்பதும், அவர்களது உணர்ச்சி சார்ந்த, உடல்நலன் சார்ந்த மற்றும் நிதி ரீதியிலான நலன்களை உறுதி செய்வதுமாகவே இருந்தது. அவர்களுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் மற்றும் தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கு மேலதிகமாக எமது அணியினர் அனைவரும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்தோம். 12,000 அங்கத்தவர்களைக் கொண்ட காகில்ஸ் அணியின் கிட்டத்தட்ட 98மூ ஆனோர் இன்றளவில் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

### தொடர்ந்தும் முன்னோக்கி

வாடிக்கையாளர் தேவைகளை நாம் நிறைவேற்றுவதற்கு உதவுவதில் எமது பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் முக்கிய பங்காற்றினர். அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு எமது பங்காளர்களுக்கு துணையாக நாம் எப்பொழுதும் உடனிருப்போம் எனவும் காகில்ஸ் உறுதியளிக்கிறது. தொடர்ச்சியாக எமக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற, எம்மீது நம்பிக்கை கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். 177 வருட பாரம்பரியத்தோடு, நாட்டின் பழமையான மற்றும் நம்பிக்கை மிகுந்த கம்பனிகளில் ஒன்றான காகில்ஸ், நியாயமான விலையில் போஷாக்கு மற்றும் இலங்கை முழுவதுமுள்ள சமூகத்தினருக்கு சேவை என்ற தனது அடிப்படை விழுமியங்களைப் பின்பற்றி தொடர்ந்தும் முன்செல்லும்.

# மின்னியலாளர்கள் 5000 பேருக்கு இவ்வாண்டில் தேசிய தொழில் தகைமை மற்றும் மின்னியலாளர் உரிமம்



மின்னியலாளர்களுக்கு NVQ 3 (தேசிய தொழில் தகைமை மட்டம் 3) இனை இலவசமாக பெற்றுக் கொடுக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகிறது. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் இவ்வேலைத்திட்டம் கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை சுமார் 2000 மின்னியலாளர்கள் NVQ 3 சான்றிதழை பெற்று உரிமம் பெறுவதற்கு தகுதிபெற்றுள்ளனர். இம்மாதத்தில் மேலும் சுமார் 1500 மின்னியலாளர்களுக்கு மீங்கி 3 இனை பெற்றுக் கொடுப்பதற்கான பரீட்சைகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தின் 3ஆம் கட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாவதுடன், ஆண்டு நிறைவுக்குள் மேலும் 2500 மின்னியலாளர்களுக்கு NVQ 3 சான்றிதழ் வழங்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெளிவுபடுத்துகையில்,

நாட்டில் சுமார் 45000 மின்னியலாளர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் 95வீதமானோருக்கு முறையான தொழில் தகைமைகள் எதுவும் இல்லை. இதனால் அவர்களுக்கு தமதுதொழில்துறையில் முன்னேற்றமடைவது கடினமாகும். அதுமாத்திரமன்றி தரமானமின்னியலாளர்கள் இல்லாமை மின்சார பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாகும். அதேவேளை,மின்னியலாளர் உரிமங்களை பெற்றுக்கொள்வதற்கு குறைந்தபட்சம் மீங்கி-3 தகைமை அவசியமாகும். இப்பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும்வகையிலேயே அனைத்து மின்னியலாளர்களுக்கும் இலவசமாக NVQ 3 இனைபெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுஆரம்பித்துள்ளது. அதற்கமைய அனுபம் வாய்ந்த சகல மின்னியலாளர்களுக்கும் துரிதநடவடிக்கையின் கீழ் எதிர்வரும் ஆண்டுக்குள் இலவசமாக NVQ 3 சான்றிதழ்களை பெற்றுக்கொடுப்பதே எமது இலக்காகும்.மின்னியலாளர்களுக்கு NVQ 3 சான்றிதழ்களை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்திற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள்ஆணைக்குழுவானது, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு, இலங்கை தொழிற்பயிற்சிஅதிகாரசபை மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை ஆகியநிறுவனங்களுடன் இவ்வாண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய தேசிய தொழில் தகைமை பரீட்சை மற்றும்கற்கைநெறி கட்டணம் ஆகியவற்றை மின்னியலாளர்கள் சார்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள்ஆணைக்குழு பொறுப்பேற்கும். மின்னியலாளர்களுக்கு நான்கு நாட்களுக்குள் முன்னனுபவமதிப்பீட்டு முறையின் (Recognition of Prior Learning - RPL based Evaluation) கீழ் NVQ-3 தகைமையைபெற்றுக் கொள்ள முடிவதானது இவ்வேலைத்திட்டத்தின் விசேட அம்சமாகும். மின்னியலாளர்கள் மீங்கி-3சான்றிதழை பெற்றுக் கொண்டதன் பின்னர் மின்னியலாளர்களுக்கான தொழில்உரிமங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு முன்னெடுத்துள்ளதாகவும்திரு.ஜனக ரத்நாயக்க அவர்கள் குறிப்பிட்டார்.மின்னியலாளர்கள் உரிமம் எதிர்காலத்தில்கட்டாயமாக்கப்பட்டு விதிமுறைகள் விதிக்கப்படும். இதுவரை மின்னியலாளர்களுக்கு 4 தரங்களின் கீழ்உயர்வினை பெற்றுக் கொள்ளும் வகையில் தொழில் உரிம முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைபொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைஉள்ளிட்ட பல நிறுவனங்களுடன் இணைந்து இந்த உரிமம் வழங்கும் முறை திட்டமிடப்பட்டுள்ளது.உரிமம் பெற்றுக் கொள்வதற்கான குறைந்தபட்ச தகுதி மீங்கி-3 ஆகும்.நாம் தற்போது அனைத்து மின்னியலாளர்களுக்கும் மீங்கி-3 சான்றிதழைஇலவசமாக பெற்றுக் கொடுக்கின்றோம். அதனால் அனைத்து மின்னியலாளர்களுக்கும் தொழில்உரிமத்தை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும். மின்னியலாளர் தொழில் உரிமம் வழங்கும்நடவடிக்கை மாவட்ட மட்டத்தில் இம்மாதம் முதல் ஆரம்பிப்பதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம்.மின்னியலாளர்களுக்கு இலவச மீங்கி-3 சான்றிதழ்பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் தொடர்பான மேலதிக விபரங்கள் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் Facebook.com/pucsl உத்தியோகப்பூர்வ ஃபேஸ்புக் பக்கத்தின்ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். 0764271030என்ற இலக்கத்திற்கு உங்களது பெயர் மற்றும் மாவட்டத்தை வட்ஸ்அப் ஊடாகஅனுப்பி வைப்பதன் மூலம் மின்னியலாளர்கள் இவ்வேலைத்திட்டற்காக பதிவு செய்துக் கொள்ளமுடியும்.

# DSI Tyres நிறுவனத்தினால் கம்பஹாமாவட்ட மருத்துவமனைக்கு 4.8 மில்லியன் பெறுமதியான Multipara Monitors அன்பளிப்பு

டயர் உலகில் புரட்சிகரமுன்னோடியானஈகுஜ கூதுணுஉண்நிறுவனம் தமதுசமூகப் பணியைமேலும் விரிவுபடுத்துமுகமாககம்பஹாமாவட்டமருத்துவமனையின் தீவிரசிகிச்சைகள்பிரிவுக்கு 4.8 மில்லியன் ரூபாய் பெறுமதியானீ Philips Multipara Monitors இயந்திரங்களைஅன்பளிப்புசெய்துள்ளது. முழு நாடே கொரோனாவின் பிடியில் சிக்கியுள்ளநிலையில் நாட்டு மக்களின் சுகாதாரபாதுகாப்பைஉறுதிப்படுத்துவதற்கு துணைநிற்கும் வகையில் வரையறுக்கப்பட்டசேம்சன் கூட்டுநிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருரணதுங்கராஜபக்ஸ அவர்களின் எண்ணக்கருவுக்கமைய DSI Tyres நிறுவனம் இந்தஅன்பளிப்பைசெய்துள்ளது. டாக்டர் சிரான் டயஸ் அவர்களின் ஒருங்கிணைப்பில் மேற்படிமருத்துவசாதனங்களைகம்பஹாமாவட்டமருத்துவமனைக்குஅன்பளிப்புசெய்யும் இந்தநிகழ்வில் சேம்சன் இறப்பர் கைத்தொழில் நிறுவனத்தின் மனிதவளப் பிரிவின் பொதுமுகாமையாளர் எம்.எச் வசந்தமற்றும் உதவி பொது முகாமையாளர் அமித்தகுமார லொக்குவித்தானகே ஆகியோருடன் கம்பஹாமாவட்டமருத்துவமனையைச் சேர்ந்தடாக்டர் சமன் சேனாநாயக்க,டாக்டர் மஹேஸ் மற்றும் டாக்டர் இலேபெருமஆகியவைத்தியர்களும் கலந்துகொண்டனர்.



Heart rate, Central venous pressure, Non & invasive blood pressure, ECG, SpO2, PaCO2 சுட்டிகளைகாட்டும் Multipara Monitors இயந்திரங்கள் தீவிரசிகிச்சைகள் பிரிவின் பணிகளைமேலும் வினைத்திறனுடனும் பயன்மிக்கதுமாகமேற்கொண்டுகவலைக்கிடமானநிலையிலுள்ளநோயாளர்களின் உயிர்களைகாப்பாற்றுவதற்குபெரும் பங்களிப்புவழங்குகிறது. இதன் மூலம் மருத்துவமனையின் அவசரத் தேவையொன்றுநிறைவேற்றப்பட்டுள்ளதாகமருத்துவமனையின் பணியாளர்கள் கருத்துதெரிவித்துள்ளனர்.

DSI Tyres நிறுவனம் தொடர்ந்தும் சமூகப் பணியில் அக்கறையுடன் பங்களிப்புசெய்துவருகிறது.சுதேசநிறுவனமானஎமதுநிறுவனம் இந்தநெருக்கடியான சூழலில் சகல இலங்கையர்களினதும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்துவருகிறது.

அத்தோடுதற்போதையகொரோனாபெருந்தொற்று சூழலில் DSI Tyres நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்களின் சுகாதார உறுதிபாட்டையும் தொழில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்குநாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.ஏனமுகாமைத்துவப் பணிப்பாளர் திருரணதுங்க ராஜபக்ஸ தெரிவித்தார்.30 ஆண்டுகளுக்குமேற்பட்டதொழில் வரலாற்றை கொண்டுள்ள சேம்சன் இறப்பர் கைத்தொழில் நிறுவனமானது, 75 இற்குமேற்பட்டநாடுகளுக்குடயர்களைஏற்றுமதிசெய்வதோடு உள்நாட்டுசந்தையில் சைக்கிள் டயர்கள்,மோட்டார் சைக்கிள் டயர்கள்,முச்சக்கரவண்டிடயர்கள்,கமத்தொழில் சார்ந்தவாகனடயர்கள் மற்றும் டியூப்களைசந்தைப்படுத்திடயர் சந்தையின் பெரும்பகுதியினைவசப்படுத்தி இத் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்குகிறது.

## உலகளாவிய நேரடி விற்பனைத்துறை

# 179.3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உலகளாவிய சக்தி மையம்

தொற்றுநோயினால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து உலகமானது மீண்டு வரும் நிலையில் நேரடி விற்பனைத் துறையானது 170க்கு மேற்பட்ட நாடுகளின் வாடிக்கையாளர்களினை அடையும் வகையில் வலுவான விற்பனைத் தளத்தினை பேணி வருகிறது. நேரடி விற்பனைத் துறையானது கோவிட் -19 நிலைமையின் மத்தியிலும் இணையத்தள வளங்களுக்கு தனது வர்த்தக பொறிமுறையை மாற்றியதன் மூலம் வளர்ச்சியடைந்துள்ளது.

நேரடி விற்பனை சங்கத்தின் புள்ளி விபரங்களுக்கு இணங்க ஆசிய பசுபிக் ஆனது உலகளாவிய நேரடி விற்பனை பிரிவுடன் ஜப்பான், சீனா, கொரியா, மலேசியா, தாய்வான், தாய்லாந்து, அவுஸ்திரேலியா, பிலிபைன்ஸ், மற்றும் இந்தோனேசியா உலகில் முன்னணி வகிப்பதுடன் பிரமாண்டமான வளர்ச்சி சாத்தியத்துடன் பில்லியன் டொலர் சந்தைகளை உள்ளடக்கியுள்ளதாக துறைசார் வல்லுனர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தெற்காசியாவில் இந்தியாவானது முன்னணி வகிக்கும் நிலையில் இதில் 60% இனர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது, இந்தியாவினை நோக்கும்போது இத்துறையில் தினமும் அனுபவ வளர்ச்சியுடைந்து வருவதை மதிப்பீடுகள் காண்பிக்கின்றன.

நேரடி விற்பனைத் துறையின் அதிவேகமான வளர்ச்சியானது நேரடி விற்பனையாளர்களுக்கான அதிகாரம் அளிக்கும் மற்றும் ஈடுபாட்டினை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் காரணமாகவே நிகழ்ந்துள்ளதாக ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இந்தியாவில் உதாரணமாக இத்துறையானது இவ்வருடத்தில் ரூபா 15,930 கோடியினை அடையும் என சங்கமானது கருதுகிறது.

உலகளாவியரீதியில் நேரடி விற்பனைத்துறையானது உலகின் மிகவும்முன்னேற்றமடைந்த மற்றும் உயர் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகளில் இருப்பு நிறுவப்பட்டதன் மூலம் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டது. 1885 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது சத்தன்வெஸ்ட் நிறுவனம் அமைக்கப்பட்டதன் மூலம் இத்துறையானது ஆரம்பிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவினை அடிப்படையாகக்கொண்ட மிகவும் புகழ் பெற்றதும் நம்பகத் தன்மை வாய்ந்ததுமாக அழகு சாதன நிறுவனமான அவோன் திகழ்வதுடன் இது பெண்களுக்கு பொருளாதார சுதந்திர அதிகாரத்தை அளித்து வருவதுடன் அவோன் பெண் ஆனவள் உயர் தரம் வாய்ந்த அணிகள் மற்றும் முக ஒப்பனை உத்திகளுக்கு புகழ் பெற்றுள்ளார். அவோன் ஆனது 2018 ஆம் ஆண்டு 5.57 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக பெற்ற நிலையில் உலகின் நேரடி விற்பனை வலையமைப்பில் பதிவு செய்யப்பட்ட 100 நிறுவனங்களில் இரண்டாவதாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க நேரடி விற்பனை சங்கமானது முன்னோடி அங்கத்தவர்களுடன் 1910 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. துறையானது வடிவமைக்கப்பட்ட வழியில் நுகர்வோர் உற்பத்திகளை பார்வையிட்டு இலகுவில் தமது வீடுகளில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. டப்பர்வெயார் விருந்து நிகழ்வுகளில் பெண்கள் தமது நண்பர்களுக்கு டப்பர்வெயார்களை அறிமுகப்படுத்தக்கூடியதாக இருந்ததால் நேரடி விற்பனையில் மட்டுமே கவனம் செலுத்தி ஒரு சக்திவாய்ந்த நிறுவனமாக வளர்ந்தது. பட்டியலில் முதலாவதாக தரப்படுத்தப்பட்ட பாரிய நேரடி விற்பனையாளர்கள் அம்வேய் ஆகும் இதனை உலகளாவியரீதியில் பல நிறுவனங்கள் பின்பற்றுகின்றன.

நேரடி விற்பனைத் துறையை உலகின் மிகவும் புகழ் பெற்ற மற்றும் நம்பகம் வாய்ந்த நாமங்கள் பல ஆற்றல்மயப்படுத்துகின்றன. வொரன் பப்பெட் தனது நேரடி விற்பனை நிறுவனத்தினை கொள்வனவு செய்ததுடன் பம்பார்ட் செப் துறையின் பிரேரணையாளராக விளங்குவதுடன் மற்றும் புகழ் பெற்ற நபர்களான முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் உலகளாவிய தொழில் முயற்சியாளர் ரிச்சர்ட் பிரான்சன் போன்றோரும் பிரதிநிதிகளாக திகழ்கின்றனர்.இத்துறையானது நேரடி விற்பனை சங்கத்தின் உலக கூட்டமைப்பினால் (WFDA) மேற்பார்வை செய்யப்படுவதுடன் இக்கூட்டமைப்பு 1978இல் உருவாக்கப்பட்டது.

பொருளாதார வீழ்ச்சியின் மத்தியிலும் நேரடி சந்தைப்படுத்தல் துறையானது எப்போதும் வளர்ச்சியினை பதிவு செய்வதானது தனிப்பட்டவர்கள் தமது சமூகத்தை சென்றடைவதற்கான முயற்சியை உறுதிப்படுத்துவதுடன் மற்றும் செயற்பாடுகளில் தமது திறனை வளர்த்துக்கொள்வதையும் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

# DIMO Initium உடன் தனது வணிக நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் DIMO



இலங்கையின் முன்னணி பாரிய நிறுவனங்களில் ஒன்றான DIMO, தொழில்துறை, ஊட்டச்சத்து மற்றும் கட்டுமான இரசாயனப் பிரிவுகளின் கீழ் சந்தைக்கு தீர்வுகளை வழங்குவதன் மூலம் தனது வணிக நடவடிக்கைகளின் விரிவாக்கத்தை தொடர்கின்றது. 'DIMO Initium' என்ற புதிய வர்த்தகநாம அடையாளத்தின் கீழ் அதன் புதிய வணிக நடவடிக்கை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றிற்கு இணங்க, தொழில்துறை மற்றும் ஊட்டச்சத்து மற்றும் கட்டுமான இரசாயன வணிகங்களின் பிரிவுகளில் முறையே உலகளாவிய முன்னணி நிறுவனங்களான BASF மற்றும் Master Builders Solutions (MBS) உடன் DIMO கைகோர்த்துள்ளது. இலங்கையில் உள்ள பல தொழில்துறைகள் மற்றும் வணிகங்களுக்கு அத்தியாவசியமான செயல்திறன் சார்ந்த தீர்வுகளை வழங்க DIMO Initium தயாராக உள்ளது.அதன் தொழில்துறை தீர்வுகள் பிரிவு இறப்பர் மற்றும் பிளாஸ்டிக், தளபாடங்கள் மற்றும் நீடித்துழைக்கும் பொருட்கள், ஆடை மற்றும் ஒட்டோமோட்டிவ் போன்ற தொழில்களுக்கு தீர்வுகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கவுள்ளதுடன், ஊட்டச்சத்து தீர்வுகள் விலங்கு, மருந்து மற்றும் மனித ஊட்டச்சத்து பிரிவுகளில் பரவலாக கவனம் செலுத்தும். மேலும், கட்டுமான இரசாயனப் பிரிவானது கலவைகள், நீர்காப்பு மற்றும் சீலண்டுகள், பழுதுபார்ப்பு மற்றும் பாதுகாப்பு உள்ளடங்கலான நிலத்தடி கட்டுமானம் மற்றும் பெர்போமன்ஸ் புளோரிங் போன்ற தீர்வுகளை வழங்குகிறது.

DIMO தலைவரும், முகாமைத்துவ பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே கருத்து தெரிவிக்கையில், ''DIMO Initium இனை உருவாக்குவது என்பது பாரிய பன்முகத்தன்மையை ஏற்படுத்துவதற்கான எமது தொடர்ச்சியான தேடலின் ஒரு பகுதியாகும். இந்த புதிய முயற்சிகள் வளர்ச்சிக்கான புதிய வழிகளை வழங்குவதுடன், புதிய வணிக களங்களுக்கான வாயில்களைத் திறக்கிறது. எங்கள் பெறுமதியான வாடிக்கையாளர்களுக்கும், ஏனைய பங்குதாரர்களுக்கும் சந்தேகத்திற்கு இடமின்றி அதிக நன்மைகளை வழங்கும் இந்த நீண்ட கால பல்வகைப்படுத்தல் உத்தியை நாங்கள் தொடர விரும்புகிறோம்,'' என்றார்.

மேலும், புதிய வணிகத் துறையின் கீழ், வாடிக்கையாளர்களுக்கு பரந்த மற்றும் மேம்பட்ட தீர்வுகளை வழங்க வளங்களில் முதலீடு செய்ய DIMO உறுதிபூண்டுள்ளது. மேலும், உள்நாட்டு உற்பத்தி மற்றும் பெறுமதி சேர்வைகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு இணங்க, கட்டுமானம் மற்றும் மருந்துகள் போன்ற பிரிவுகள் தொடர்பாக, இந்த இலக்கை நோக்கி பங்களிக்கும் திறனைப் பற்றி DIMO நம்பிக்கையுடன் உள்ளது.

# 'வன் ஜே.கே.ஹெச்' - ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் உள்ளடக்கம் ஆகிய தரவகை

150 ஆண்டுகளுக்கும் மேலானபாரம்பரியத்தில்,தங்கள் பணியாளர்களின் பன்முகத்தன்மையை மதிப்பிடுவதற்கான குழுவின் முற்போக்கான அணுகுமுறை,மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதையும், மரியாதை, கண்ணியம் மற்றும் நியாயத்தோடுநடத்தப்படும் போதுஅவர்கள் சிறப்பாக வேலையைச் செய்வதையும் நிரூபித்துள்ளது,மேலும் ''ஜேகேஎச் இல் வாழ்க்கை'' என்பதன் முக்கியத்துவத்தில் தொடர்ந்தும் கவனம் செலுத்துகிறது, உள்ளடக்கம் எனும் அமைவினால்,மரியாதையும் நம்பிக்கையும் அடிப்படையாக கொண்டு ஒவ்வொருவரும் தாங்கள் உண்மையாகவும்சுயமாகவும் இருக்க கூடுமானாதாக உள்ளது. ஜோன் கீல்ஸ் குழுவிற்குள் பன்முகத்தன்மை,சமபங்குமற்றும் உள்ளடக்க; (DEI) ஆகியவற்றின் அடிப்படையில் பரந்த அளவிலான பணிகள் செய்யப்படுவதால், இந்தமுயற்சிகளைசிறப்பாகஅறிவிக்க, 'வன் ஜேகேஎச்' ஒருவருடத்திற்குமுன்புஆரம்பிக்கப்பட்டது மற்றும் இனம்,மதம்,பாலினம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் தொடர்புகொள்கிறது. அடையாளம்,பாலியல் நோக்குநிலை,வயதுமற்றும் திறன், ஜேகேஎச்.இல், 'நாமெல்லாம்ஒன்று'; இலச்சினையில்பயன்படுத்தப்படும் நிறங்கள் பாலினசமத்துவம்,மாற்றுத் திறனாளிகள் மற்றும் LGB-T-IQ எனும் பாலினநபர்களைகுறிக்கின்றன.

கடந்த 5 ஆண்டுகளில்,ஜோன் கீல்ஸ் குழு பன்முகத்தன்மையின் பல்வேறுஅம்சங்கள் தொடர்பானபலமுக்கியமுயற்சிகளில் பணியாற்றியுள்ளது. பாலினபன்முகத்தன்மை தொடர்பாக,ஐஎப்சி ஷிவெர்க்ஸ் ஸ்ரீலங்கா கூட்டாண்மை மற்றும் ஐ.நா. குளோபல் காம்பாக்டின் தீவிரப்படுத்தப்பட்ட திட்டமான பாலின சமத்துவத்தில் குறியிலக்குஎன்பதில் தமதுபணியிடத்தில் பெண்களை, குறிப்பாக முடிவெடுக்கும் மட்டத்தில் அதிகரித்தது. உலகளாவிய வடிவமைப்பாளர்கள் மாற்றுத்திறனாளிகளின்உச்சிமாநாட்டைக் கொண்டுள்ளது மற்றும் குழுவின் வணிக இடங்களை சக்கர நாற்காலி பாவனைக்கு ஏற்றதாக மாற்ற முயற்சிக்கிறது. ஜோன் கீல்ஸ் LGB-T-IQ சமூகத்தை முறையாக உள்ளடக்கிய அனைத்து மக்கள் தொடர்பானகொள்கைகளையும் உள்ளடக்கியது மற்றும் ஈக்குவல் கிரவுண்ட் மூலம் விழிப்புணர்வுஅமர்வுகளைநடத்துவதுமற்றும் கிராஸ் ரூட்டட் டிரஸ்ட் மற்றும் தேசிய திருநங்கை வலையமைப்பினூடாக ஊழியர்களின் உணர்வைபுரிந்துகொள்வதைதொடர்ந்துகருத்தில் கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின்னர் பல்வேறு இன சமூகங்களை இணைப்பதற்கான ஒருசெய்தியுடன், குழுவானது நாடளாவிய பிர சாரத்தைதொடங்கியது - ''நாங்கள் வலுவாக ஒற்றுமையாக இருக்கிறோம். நாம் ஒரே தேசமாக ஒன்றிணைவோம்.''




வன் ஜேகேஎச்.சின் முக்கியகவனம் தொழிலாளர் மற்றும் விநியோகச் சங்கிலியில் பெண்களைஅதிகரிப்பதும் மற்றும் எங்கள் சமூகங்களில் உள்ள பெண்களுக்குஅதிகாரம் அளிப்பதுமாகும். 2021 ஆம்ஆண்டில், குழு தங்கள் 5 ஆண்டு இலக்கில்பணியிடத்தில் பெண்களை 40% வரை அதிகரிக்க வேண்டுமென அறிவித்தது. இந்த இலக்கைஅடைய, மூத்ததலைமைக் குழுவால் ஆதரவளிக்கப்பட்ட மற்றும் வழிநடத்தப்பட்டதொடர்ச்சியான இடையீடுகள், மகப்பேறுமற்றும் தந்தை வழிவிடு முறையை மேம்படுத்துதல், சுறுசுறுப்பான வேலைஏற்பாடுகளைஊக்குவித்தல்,தொழில் தருநர்ஆதரவுடன்குழந்தை பராமரிப்பில் செயல்முறைகளைஉருவாக்குதல் வசதிகள், பெண்களை மையப்படுத்திய பயிற்சிமற்றும் வழிகாட்டுதல்,நிறுவனத்திற்குள் பெண்களுக்கான பாரம்பரியமற்ற பாத்திரங்களை இலக்கு வைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் தக்கவைத்தல் அடையாளம் காணுதல், விழிப்புணர்வு அமர்வுகள் மற்றும் மயக்கமற்ற சார்புகளைநிவர்த்திசெய்தல் போன்ற அனைத்து நிலைகளிலும் பெண்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் செயல்படுத்தப்பட்டது.